


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (2.8.2024) சென்னையில், 1973ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட அண்ணா மேம்பாலத்தின் பொன்விழாவையொட்டி, 10 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டு வண்ண விளக்குகள் ஒளிர அழகுபடுத்தப்பட்டுள்ள அண்ணா மேம்பாலத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் நே. சிற்றரசு, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர் டாக்டர் ஆர். செல்வராஜ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தரவு பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்படுமா?

## மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஆக.4-

தரவு பாதுகாப்பு ஆணையம் எப்போது அமைக்கப்படும் என்று மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி எழுப்பினார்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

நாடாளுமன்றத்தில் தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, சப்தகிரி சங்கர் உலாகா, ஆண்டோ ஆன்டனி, அபிஷேக் பானர்ஜி ஆகியோர் எழுத்துப்பூர்வமாக, டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்பு (DPDP) சட்டம், 2023-இன் கீழ் தரவு பாதுகாப்பு ஆணையத்தை அரசாங்கம் உருவாக்கியுள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள்; இல்லையெனில், அதற்கான காரணங்கள்; டீப் ஃபேக்ஸ் போன்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களால் முன்வைக்கப்படும் தனித்துவமான சவால்களை எதிர்கொள்ளும் திட்டத்துடன் தரவு பாதுகாப்பு ஆணையம் இல்லாத நிலையில் தரவு பாதுகாப்பு மற்றும் தரவு தனியுரிமை தொடர்பான சிக்கல்களைச் சமாளிக்க அரசாங்கம் ஏதேனும் திட்டங்களை முன்மொழிகிறதா?" ஆகிய கேள்விகளை எழுப்பினர்.



இந்த கேள்விகளுக்கு ஒன்றிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான இணைய மைச்சர் ஜிதின் பிரசாதா அளித்த எழுத்துபூர்வ பதில் வருமாறு:-

டிஜிட்டல் தனிநபர் தரவு பாதுகாப்பு சட்டம் 2023 ( DPDP) , நாடாளு மன்றத்தில் 2023 ஆகஸ்ட் 8-ஆம் தேதி நிறைவேற்றப்பட்டது. இந்திய குடியரசுத் தலைவர் 2023 ஆகஸ்ட் 11 அன்று இந்த சட்டத்துக்கு ஒப்புதல் அளித்தார்.

மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் இந்த சட்டத்துக்கான விதிமுறைகளை உருவாக்கும் செயல்முறையைத் தொடங்கியிருக்கிறது. DPDP சட்டத்தின் கீழ் விதிமுறைகள் அறிவிக்கை செய்யப்பட்ட பிறகு, தரவுப் பாதுகாப்பு ஆணையம் அமைப்பது அடுத்த கட்ட முக்கியமான நகர்வாக அமையும்.

ஒன்றிய அரசு தகவல் தொழில் நுட்ப சட்டம் 43A பிரிவு (2011) விதிகளின் கீழ் டிஜிட்டல் பாதுகாப்பு நடவடிக்கைகளையும், நடைமுறைகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்த விதிகளின்படி, அனைத்து நிறுவனங்களும் உணர்திறன் மற்றும் தனிப்பட்ட தரவுகள், தகவல்களை நியாயமான பாதுகாப்பு நடைமுறைகளின்படி சேமிக்க வேண்டும்.

தரவுப் பாதுகாப்பில் வரம்பு மீறல் இருந்தால், அங்கீகரிக்கப்பட்ட விசாரணை அமைப்பு கேட்கும் போது, ஆவணப்படுத்தப்பட்ட தகவல் பாதுகாப்புத் திட்டம் மற்றும் கொள்கைகளின்படி தாங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செயல்படுத்தியதாக அந்த நிறுவனம் அல்லது அதன் பிரதிநிதி நிரூபிக்க வேண்டும்.

தவிர, மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சகம் இடைநிலை வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் மீடியா நெறிமுறைகள் ஆகியவற்றை 25.02.2021 அன்று அறிவித்தது. அவை 28.10.2022 மற்றும் 6.4.2023 ஆகிய தேதிகளில் திருத்தம் செய்யப்பட்டன.

ஐ.டி. விதிகள், (2021) எண் 3(1)b -இன் கீழ் தடை செய்யப்பட்ட எந்தத் தகவலையும் பகிர்தல், பதிவேற்றுதல், அனுப்புதல் போன்றவற்றை அனுமதிக்கக்கூடாது.

விதி 3(1)(b)(v) மற்றும் (vi) ஐடி விதிகள், 2021-இன் கீழ், மற்றொரு நபரைப் போல ஆள்மாறாட்டம் செய்வது மற்றும் தவறான தகவல்களை பகிர்வதை தடுக்கிறது.

ஐ.டி. சட்டம் 2021-இன் விதிகள் 3(1) (l) இன் படி இணைய பாதுகாப்புக்கு சவால் விடும் சம்பவங்கள் பற்றி இந்திய கம்ப்யூட்டர் எமர்ஜென்சி ரெஸ்பான்ஸ் டீம் அமைப்பிடம் புகார்களை அளிக்கவும், அது தொடர்பான தகவல்களை பகிரவும் வழி வகை செய்கிறது.

ஐ.டி. சட்டம் 2021-இன் விதிகள் 3(1)(b) இன் கீழ் தடைசெய்யப்பட்ட வகைகளுக்குள் வரும் எந்த தகவலும் இடைநிலை தளத்தில் இருக்கும் பட்சத்தில், பயனாளர் அந்த இடைநிலை தளத்தின் குறை தீர்க்கும் அலுவலர்களிடம் கோரிக்கை வைக்கலாம். இப்படிப்பட்ட புகார்கள் பெறப்படும் பட்சத்தில் பரிந்துரைக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் 2021 ஐடி விதிகளின் விதி 3(2)ன் கீழ் விரைவாக செயல்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஐ.டி. சட்ட விதிகள் 3 A இன்படி அரசாங்கம், குறைதீர்க்கும் மேல்முறையீட்டு கமிட்டியையும் உருவாக்கியுள்ளது. இதன் படி குறை தீர்க்கும் அலுவலர்களின் நடவடிக்கையில் திருப்தி அடையாத பயனர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள், அந்த முடிவுக்கு எதிராக www.gac.gov.in என்ற தளம் மூலம் மேல்முறையீடு செய்ய முடியும்" என்று எழுத்துப்பூர்வ பதிலில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த நாடுகளின் நிறுவனங்கள்

# இந்திய நிறுவனங்களுக்கு ஆதரவளிக்க ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன?

## கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

*புதுடெல்லி, ஆக.4-*

*ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த நாடுகளின் நிறுவனங்கள் இந்திய நிறுவனங்களுக்கு ஆதரவளிக்க ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என மக்களவையில் எழுத்துப்பூர்வமான பதில்களுக்காக கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.*



*அதன் விவரம் பின்வருமாறு:-*

*வர்த்தகம் மற்றும் பொருளாதார கூட்டு ஒப்பந்தத்தின் (TEPA) கீழ் ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கம் (EFTA) நாடுகள் தங்கள் $100 பில்லியன் வெளிநாட்டு நேரடி முதலீட்டு (FDI) உறுதிப்பாட்டை எந்த அளவிற்கு பூர்த்தி செய்கின்றன என்பதை அமைச்சகம் எவ்வாறு உறுதி செய்கிறது, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.*

*ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கம் முதலீட்டு உறுதிமொழிகளை நிறைவேற்றத் தவறினால், சலுகைகளை திரும்பப் பெறுவதைக் கண்காணித்து நடைமுறைப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.*

*100 பில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீட்டை ஈர்ப்பதற்கும் எளிதாக்குவதற்கும் அமைச்சகத்திடம் எந்த அளவிற்கு முன்மொழிவுகள் உள்ளன மற்றும் அது நாட்டில் பத்து லட்சம் நேரடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு பங்களிக்கிறதா என்பதை ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் எவ்வாறு உறுதிப்படுத்துகிறது என கேள்வி எழுப்பினார்.*

*ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்க நாடுகளின் நிறுவனங்களுடன் இந்திய நிறுவனங்களுக்கு கூட்டாண்மைகளை உருவாக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன என கேள்வி எழுப்பினார்.*

*சர்வதேச வர்த்தக உறவுகளைப் பேணுவதற்காக, இந்திய மசாலா ஏற்றுமதியில் உள்ள தரத் தரங்கள் மற்றும் மாசுப் பிரச்சினைகளை அமைச்சகம் எவ்வாறு கையாள்கிறது; மற்றும் இந்தியா - இங்கிலாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின்படி தற்போதைய பேச்சுவார்த்தைகளில் கவனம் செலுத்தும் முக்கிய தலைப்புகளின் விவரங்கள் மற்றும் புதிதாக ஆட்சியில் அமர்ந்துள்ள தொழிலாளர் கட்சி அரசாங்கத்துடன் அமைச்சகம் ஈடுபட திட்டமிட்டுள்ள விதம் என்ன என கேள்வி எழுப்பினார்.*


